11th March 1969]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : 1965 மே மாதம் கட்டினார்கள். 6 மாதம் தான் அந்த மக்கள் குடியிருந்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு இரண்டரை ஆண்டு காலமாக அவர்கள் குடி இருக்கவில்லை. விளக்கில்லை, தண்ணீர் இல்லை என்றால் அப் போதே அவர்கள் சென்றிருக்கவேண்டும். இப்போது எங்கே காலியாக இருக்கின்றன என்பதை சப்-கலெக்டர் சென்று ஆராய்ந்து பார்த்ததில், அங்கே திருடு அதிகமாக வருகிறது என்று அஞ்சி அந்த மக்கள் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறு காரணங்களும் தெரிந்திருக்கலாம்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்** : நல்லார் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல 1,000 ரூபாய்க்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தில் பெரும்பாலான வீடுகள் குடியேறுவதற்கு லாயக்கானதாக இல்லாமல் இருப்பதால், அதைப் போன்ற அடிப் படையில் இப்போது வீடு கட்டிக்கொடுக்கும்போது அவை குடியேறுவதற்குத் தகுதியாக இருக்கும் நிலையில் அமைக்கப் படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : சில இடங்களில் இப்போது அரிஜன மக்கள் குடியிருக்கிறார்கள். பல வீடுகள் விரைவில் விழுந்துவிட்டதால் குடியிருக்கவில்லை. ரூ. 1,000-க்கு வீடுகள் கட்டும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு, ரூ. 3,000 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் துணையோடு நிறைவேற்றலாம் என்று இருக்கிறோம்.

**திரு. சி. வி. இராஜகோபால்** : 1965-ல் கட்டப்பட்ட வீடுகள் ஒரு மாதம் கூட குடியிருக்க முடியாத அளவில் ஓட்டை உடைசலாக இருந்ததால், பாம்பும், தேளும், நட்டுவாககளியும் இருந்ததால், மக்கள் பயந்துகொண்டு போய்விட்டதாகக் கூறுகிறார்களே, வாஸ்தவமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : இருக்கலாம்.

### *Houses for Harijans*

* 185 Q. THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to build houses by the State Government for the Harijans of the State, with the subsidy of the Central Government; and

(b) if so, the date of introduction of the scheme?

### அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம்

**திரு. கே. தங்கபாண்டியன்** : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

[11th March 1969

(அ) மாநிலத்திலுள்ள அரிசன மக்களுக்கு மத்திய அரசின் நிதி உதவியோடு மாநில அரசு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப்படும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) இந்திய அரசின் இசைவு கிடைத்த பிறகு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் ஏற்கனவே உள்ள அரசினால் கட்டப்பட்ட வீடுகளில் அரிஜன மக்கள் குடியேறாததால் அந்த வீடுகள் அழிந்துவிட்டன. அந்த வீடுகளில் உள்ள மரச் சாமான்கள், ஓடுகள் வீணாகாமல் பாதுகாப்பதற்கு, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதுபற்றி புகார் ஏதுவும் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. புகார் கொடுத்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. டி. கே. சுப்பையா :** தமிழகத்தில் எவ்வளவு வீடுகள் கட்டி வாசம் செய்யாமல் காலியாக இருக்கின்றன என்ற புள்ளி விவரம் இருக்கிறதா? அவ்வாறு இருந்தால் அதை நீக்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தற்போது அந்தக் குறிப்பு இல்லாவிட்டாலும் கூட, ஏற்கனவே 80 ஆயிரம் மனைக் கட்டுகள் கொடுக்கப்பட்டு, அதில் அரிஜன மக்கள், வீடுகள் கட்டாமல் காலியாக விடப்பட்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். சற்றுமுன் கூறிய கைலாசப்பட்டியில் 79 மனைக்கட்டுகள் கொடுத்து 1965-ல் அவை கட்டப்படவில்லை. அதைப்போல 86 ஆயிரம் முதலில் இருந்தது. நாங்கள் பொறுப்பேற்ற பிறகு அவர்கள் வீடுகட்டுவதற்காக விரைவுபடுத்தி உடனே கட்ட வேண்டும் என்றும், இல்லாவிட்டால் மனைகளைத் திரும்பப் பெறுவோம் என்று அச்சுறுத்தி எச்சரிக்கை தந்த பிறகு, 13 ஆயிரம் பேர் வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். மேலும் சிலர் கட்ட முடியாதவர்கள், மிகவும் வறுமையில் இருக்கிறவர்களுக்கு குறைந்த செலவில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் புதிய முயற்சிகள் எடுத்து போதிய திட்டங்களையெல்லாம் உருவாக்கிக் கொண்டு வருகிறது.

**THIRUMATHI S. MANJUBHASHINI :** The Hon. Minister has said that there are vacant houses not occupied in the State. Will this Government take efforts to see that these houses are occupied and some facilities are given so that they are occupied instead of trying to build more houses and allowing them to remain vacant all these years?

11th March 1969]

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** குறிப்பிட்ட அந்த வெகலாசப்பட்டியிலுள்ள வீடுகளைத்தான் திருட்டின் காரணமாகக் குடியிருக்க முடியாமல் காலியாக்கிவிட்டு சென்றுவிட்டதாக சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தான் வேறு காரணம் இருப்பதாகக் கூறினார்களே தவிர, அது குறித்து அரசாங்கத்திடம் தகவல் இல்லை என்று கூறினேன். நானாகவே அவர்கள் வீடுகளில் குடியில்லாமல் போய்விட்டார்கள் என்று கூறவில்லை.

***திரு. என். ஆர். தியாகராஜன் :*** கம்பர் வரலாற்றிலே ஒரு கதை சொல்வார்கள். 'நெல் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே' என்று அவர் கூலியை வாங்கிக் கொண்டு போகும் வரையிலாவது அந்தச் சுவர் நிற்க வேண்டுமென்று பாடியதாகச் சொல்வார்கள். அதைப்போல கண்ட்ராக்டர்கள் அரிஜன மக்களுக்கு கட்டிக் கொடுக்கிற வீடுகள் அவர்கள் அதற்கான 'பில் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்று சொல்வது போல, பில்லுக்குப் பணம் வாங்கிப் போனவுடனேயே அவர்கள் கட்டிய வீடுகள் விழுந்துவிடுகின்றன என்று கூறப்படுவது உண்மையா ?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அப்படி கண்டிராக்டர்கள் கட்டிக் கொடுத்ததால்தான் விழுந்துவிட்டன. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அங்கே சென்று பாடினால், அரசாங்கத்திற்கும் கொஞ்சம் பணம் மிச்சமாகுமென்று கருதுகிறேன்.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : Have the Government taken any action against the contractors who were responsible for the construction of flimsy houses and also against the officers who were responsible for the passing of such work?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** ரூ. 750 அரசாங்க மானியமாகவும் ரூ. 250 மக்கள் தாங்களாகவே பணமாகவோ உடல் உழைப்பாகவோ தரவேண்டுமென்ற அடிப்படையில், ஆயிரம் ரூபாய் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அந்த மக்களில் சிலர் அவ்வளவு அதிகப்படியான பணம் செலவழித்து அவர்களாகவே தங்கள் மூலமாக கண்டராக்டர்கள் வைத்துக் கட்டச் செய்ததால் பல தவறுகள் கடந்த முறையில் ஏற்பட்டன. அவற்றை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது. யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவல் இப்போது என்னிடத்தில் இருக்கவில்லை.

THIRU A. R. DAMODARAN : With reference to Question No. 185, may I know the number of houses that are proposed to be built for Harijans in this State, the amount of subsidy that is to be given by the Central Government, the amount of subsidy that is given by the State Government and the amount of loan to be given by the State Government?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** அந்தப் புதிய திட்டத்தில் இரண்டு வகைப் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் இருக்கின்றது. ஒன்று, ரூ. 2,850-லும் மற்றொன்று ரூ. 2,500-லும்,

மத்திய அரசு பணமாக ரூ. 1,200 மானியமாகத் தருவதாகவும், மாநில அரசாங்கம் ரூ. 1,320 கடனைகத் தருவதாகவும, அப்படி யாருக்கு அந்த வீடுகள் போய்ச் சேருகிறதோ அந்த அரிஜன மக்கள் ரூ. 330 உடல் உழைப்பாகவோ வேறு பல உப பொருள் களாகவோ தரலாம் என்றும் இருக்கிறது. இது ரூ. 2,850 திட்டம். மத்திய அரசாங்கத்தின் மானியமாக ரூ. 1,200-ம் மாநில அரசு கடனுக ரூ. 1,040-ம், ரூ. 260 அரிஜன மக்களுடைய சொந்தப் பணமாகவும் சேர்த்து ரூ. 2,500-க்கு வீடுகளைக் கட்டு கிறது. மற்றொரு செயல் திட்டமும் தயாரித்து மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கிருந்து உரிய ஒப்புதல் வரவில்லை. ஒப்புதல் கிடைத்தால் ரூ. 3 லட்சம் இந்த ஆண்டுக்கு ஒதுக்கி, அந்த அடிப்படையில் வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, the Hon. Minister has just mentioned that the people are unwilling to occupy these houses because of the fear of burglaries in that area. Would it not be much more economical in the long run to give Police protection in earlier months so that they may keep these houses from this fear.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* அவர்கள் வீட்டை விட்டுப் பயந்து ஓடிப்போய் இரண்டரை ஆண்டுகள் காலம் ஆகிறது.

*திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி :* மீண்டும் அவர்களுக்கு அதைக் கொடுப்பதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த சர்க்காருக்குத்தான் அந்தப் புகழ் லாபமாக இருக்கும்.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* குறிப்பிட்ட கிராமத் தில்தான் அந்த நிலை இருப்பதாகக் கூறினேன். 10 பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன் பயத்தின் காரணமாக அவர்கள் ஓடிப்போய்விட்டார்கள். இப் போது கூப்பிட்டுக் கொடுத்தால் கூட அவர்கள் வருவதற்குத் தயாராக இல்லை. இப்போது அவர்கள் இருப்பிடம் கூட அரசாங் கத்திற்குத் தெரியாமல் இருக்கலாம்.

*திரு. எம். எத்திராஜுலு :* தென் ஆற்காடு மாவட்டத்தில், அரிஜனங்களுக்கு வாங்கப்பட்ட மனைகளில் 6, 7 ஆண்டுகாலமாக 15 கிராமங்களில் குடியேறுமல் இருக்கிறார்கள். அங்கே வீடுகள் கட்டிக் கொள்ளாததற்குக் காரணம் அந்த இடம் பள்ளமாக இருக்கிறது. அதற்கு மண் போடுவதற்கு ரூ. 35 லட்சம் தேவைப் படுகிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினோம். அரசு ஒப்புதல் தெரிவித்தால், மண்போட்டு மேடாக ஆக்குவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரசு ஒப்புக்கொண்டால் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அரிஜன நல இலாகா அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

11th March 1969]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கனம் உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட தவறான கருத்துக்களின் மூலம் தன்னைத் தானே குழப்பிக்கொண்டு இன்னும் பல கேள்விகள் கேட்க முன் வருவார் என்று கருதுகிறேன். பள்ளத்தை மேடாக்கி தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்கிறோம் என்றால் அரசாங்கம் அதற்குக் குறுக்கில் நிற்காது. பள்ளம் மேடாக வேண்டுமென்றும் அதற்கான பணம் அரசாங்கம் தரவேண்டுமென்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே கடந்த கால அரசு நஞ்சை நிலத்தை, 3, 4 அடி பள்ளமான நிலத்தை, அரிஜன மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்று ஆர்ஜிதம் செய்து அதற்கு மேலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகுமென்று அந்தப் பள்ளங்களை மூடாமலும் அவர்களும் வீடுகள் கட்டாமலும் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் ஜில்லா வாரியாக பல லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு செலவாகிக்கொண்டு இருக்கிறது. மக்கள் முன் வந்து தாங்களே மேடாக்கிக் கொள்கிறோம் என்றால் தாராளமாகச் செய்து கொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து உருவாக்கும் திட்டத்தில், மாநில அரசுக்கு கொடுக்கவேண்டிய கடனை எத்தனை ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 15 ஆண்டுகளில் திருப்பித் தருவதற்காகும்.

Palayamkottai-Melapalayam Drinking Water Supply Scheme.

*186. Q. THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Palayamkottai Municipality has requested the division, into two, of the Drinking Water Supply Scheme common to both the Municipalities of Palayamkottai and Melapalayam; and

(b) if so, the action taken thereon?

**பாளையங்கோட்டை-மேலப்பாளையம் நீர் வழங்கும் திட்டம்**

**திரு. என். ஆர். தியாகராஜன்:** மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய இரு நகர சபைகளுக்குப் பொதுவாக உள்ள குடி தண்ணீர் திட்டத்தை இரு பிரிவாக பிரிக்கும்படி பாளையங்கோட்டை நகராட்சி கோரியதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) பாளையங்கோட்டை மேலப்பாளையம் நகராட்சிக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கு திட்டத்தைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கும் அதை திருத்தியமைப்பதற்குமான கருத்துருவை அரசு இப்போதைக்கு நிறுத்தி வைக்கத் தீர்மானித்திருக்கிறது.